Registered as a Newspaper

அன்பளிப்பு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 12 வெள்ளிக்கிழமை (26-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 61

# ஏறாவூரில் 5 நிமிட நேர அதிரடியில்

# 5 பொலிஸார் நேற்றுக் காலை பலி!

## 3 காவலரண்கள் அழிக்கப்பட்டன!!

சாவகச்சேரி, ஜனவரி. 26

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூரில் ஐந்தாம் குறிச்சி என்ற இடத்தில் ஸ்ரீலங்கா பொலீஸ் காவலரண்கள் மூன்றை நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் தாக்கிக் கைப்பற்றி அழித்தனர். எவ்வித இழப்புமின்றி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஐந்து நிமிட நேரத் தாக்குதலில் ஐந்து பொலீஸார் கொல்லப்பட்டனர்; ஏனையோர் தப்பி ஓடி விட்டனர்.

பெரும்பான்மையாக முஸ்லிம் மக்கள் வாழும் இப்பகுதியில் விடுதலைப் புலிகள் அடிக்கடி அதிரடித் தாக்குதலை நடத்துவதை அடுத்து பொலீஸாரும், இராணுவத்தினரும் எந்நேரமும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர் என்றும் —

இதற்கு மத்தியிலும் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது படை வட்டாரங்களை அதிர்ச்சி அடையச் செய்திருப்பதாகவும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

நேற்றைய தாக்குதலில் புலிகளினால் ஆயுதங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டன.

## சந்திரிகாவின் இன்றைய மாநாடு:

## பௌத்த பீடங்களின் தலைவர்கள் பகிஷ்கரிப்பர்

லண்டன், ஜன. 26

ஜனாதிபதி சந்திரிகா முன்வைத்துள்ள அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து புத்த பிக்குகளுடன் விவாதிக்க அரசு இன்று சனிக்கிழமை ஒழுங்கு செய்துள்ள கூட்டத்தில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என இலங்கையின் 3 பௌத்த மத பீடங்களினதும் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

இவர்களுள் செல்வாக்கு மிக்க மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகளும் அடங்குவர் என பி. பி. ஸி. தெரிவித்தது.

இன்றைய கூட்டத்தில் சுமார் ஆயிரம் பிக்குகள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் -

இதன் மூலம் தீர்வுத் திட்டத்துக்கு பெரும்பான்மைச் சிங்கள மக்களின் ஆதரவைப் பெற பிக்குமாரின் உதவி நாடப்பட உள்ளதாகவும் — பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. (இ-7)

# பொலிஸ் அதிரடிப் படையினர் மீது

# மட்டக்களப்பில் புலிகள் தாக்குதல்

## இருவர் கொல்லப்பட்டனர்

சாவகச்சேரி, ஜன. 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் 19 ஆம் கட்டை என்ற இடத்தில் ஸ்ரீலங்கா பொலீஸ் அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு பொலீஸ் அதிரடிப் படையினர் கொல்லப்பட்டனர்; ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக் காலை 9. 40மணியளவில் 19ஆம் கட்டை முகாமிலிருந்து லொறி ஒன்றில் வந்த பொலீஸ் அதிரடிப் படையினர் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

இதன்போது உதவிக்கு வந்த அதிரடிப்படையினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். எனினும் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

இத்தாக்குதலின் போது கோல் கொமாண்டோ — ஒன்று, ரி-56-1 ரகத் துப்பாக்கி — ஒன்று, கோல் கொமாண்டோ ரவைக் கூடுகள் — 3, ஏ. கே. ரவைக்கூடு —இரண்டு, 5. 56 ரவைகள்— 45, நடுத்தர ரவைகள் — 96, ஏ. கே. கோல்சர் — ஒன்று, செற் — ஒன்று என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இந்தத் தாக்குதலில் வீரவேங்கை சுகப்பிரியன் (செல்லத்துரை தேவசங்கர் — மட்டக்களப்பு) என்ற போராளி வீரச்சாவடைந்தார். (இ-7)

## ஆசிரியர் சம்பளம் கட்டுநிதி

சாவகச்சேரி, ஜன. 26

யாழ் மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு ஜனவரி மாதச் சம்பளம் வழங்குவதற்கான கட்டு நிதியாக 3 கோடி 40லட்சம் ரூபா இன்று அல்லது நாளை சாவகச்சேரிக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## வடக்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் யாழ்.நகர் அழைத்துச் செல்லப்பட்டார்

### 3 பாடசாலைகளை திறக்க அரசு முயற்சி

சாவகச்சேரி, ஜன. 26

யாழ்ப்பாணத்தில் படையினர் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் 3 பாடசாலைகளை திறக்கும் நோக்குடன் வடக்கு-கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி படையினரால் யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் யாழ். மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கிழக்கில் படையினர் முகாம் திரும்பினர்

### எவ்வித இலக்கையும் அடையவில்லை

சாவகச்சேரி, ஜன. 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட 'சூரிய ஒளிக்கற்றை' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் எதுவித இலக்குகளையும் அடையாத நிலையில் முகாம்களுக்குத் திரும்பிவிட்டனர்.

எனினும் படை நிலைகளிலிருந்து தொடர்ந்தும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

5 ஆயிரம் இராணுவ கொமாண்டோக்களும், விசேட அதிரடிப் படையினரும் ஈடுபடுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையில் எதுவித இலக்கையும் அடையமுடியாத நிலையில் இழப்புகளுடன் படையினர் தமது முன்னைய நிலைகளுக்குப் பின்வாங்கிச் சென்றுவிட்டனர் என்றும்—

தற்போது மட்டக்களப்பு வாவியின் உட்புறம் மட்டும் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ளது என்றும்—

சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கைக்குப் பின் கிழக்கில் தனது மேலாண்மையை காட்டுவதற்காக நடத்தி தோல்விகண்ட இரண்டாவது இராணுவ நடவடிக்கை இதுவென்றும்— புலிகளின்குரல் வானொலி மேலும் தெரிவித்தது. (இ-7)

## 39 படையினர் விவரம் அரசு நேற்று வெளியிட்டது

வடக்குக் கடலில் ஹெலிக்கொப்டருடன் காணாமல் போன 39 படையினரின் பெயர்,விவரங்களை ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் வெளியிட்டுள்ளன.

இதேவேளை—

ஹெலியைத் தேடும் பணி தொடர்வதாகவும்—

ஆனால் அதில் இன்னும் பலன் கிட்டவில்லை என்றும் கொழும்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் இந்த விடயம் குறித்து தொடர்ந்து விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு விசாரித்து வருகின்றார்கள் என்றும்—

இச்சம்பவத்தில் தப்பியிருக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை அனுமதிக்கான கடிதங்கள் பெப்.28க்கு முன்

கொழும்பு, ஜன. 26

1995/96 ஆம் கல்வி ஆண்டுக்கு 9 ஆயிரத்து 787 மாணவர்கள். 9 பல்கலைக்கழகங்களுக்கும் சேர்த்துக் கொள்ளப்படுவர். அனுமதிபெறும் மாணவர்களுக்கு பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன் அனுமதிக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

1994 ஆம் ஆண்டு நடந்த பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையிலேயே இவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

புதிய மாணவர்களுக்கான ஆங்கில பொது பயிற்சி மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது.

இவர்கள் தமக்கு அருகில் உள்ள பயிற்சி நிலையங்களில் பெப்ரவரி 28 ஆம் திகதி சமுகமளிக்கவேண்டும்.

100 பயிற்சி நிலையங்களில் பயிற்சி இடம்பெறும்.

சகல பல்கலைக்கழகங்களும் இந்த கல்வி ஆண்டை ஜூன் மாத முடிவுக்குள் ஆரம்பிக்க இணக்கம் தெரிவித்துள்ளன. [இ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்தப் பரிசோதனை வசதி இல்லை

தாளையடி, ஜன. 26

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையில் மலேரியாவுக்கான இரத்தப் பரிசோதனை வசதி இல்லாததால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இப்பகுதியில் மலேரியா நோய் தீவிரமாகப் பரவிவருவதால் இரத்தப் பரிசோதனை வசதி அவசியம் என்று கருதப்படுகிறது. (இ-144)

# ஆசிரியர் கஷ்டப் பிரதேச அலவன்ஸ்: மீண்டும் வழங்குவதற்கு அனுமதி

தாளையடி, ஜன. 26

ஆசிரியர்களின் இடைநிறுத்தப்பட்டிருந்த கஷ்டப் பிரதேச அலவன்ஸை மீண்டும் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றி வந்த ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அலவன்ஸ் கடந்த ஏப்ரல் மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இம்மாதச் சம்பளத்துடன் மீண்டும் இந்த அலவன்ஸ் வழங்கப்பட உள்ளது.

அத்துடன் இடைநிறுத்தப்பட்டுள்ள மாதங்களுக்குரிய நிலுவையை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள், ஆசிரிய சேவையில் உள்வாங்கப்படுவதற்கு முன்னர் எவ்வளவு பணத்தினை கஷ்டப் பிரதேச அலவன்ஸாகப் பெற்றார்களோ, அத்தொகை மட்டுமே தொடர்ந்தும் கஷ்டப் பிரதேச அலவன்ஸாக வழங்கப்பட உள்ளது.

மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் இயங்கும் 17 பாடசாலைகளின் ஆசிரியர்களும் கஷ்டப் பிரதேச அலவன்ஸைப் பெறவுள்ளன.

## வன்னிமண் உன்னை வரவேற்கும்

நண்பா!

தபால்கள் தாமதமாகியே வருவதால் ...
நேற்றுத்தான் நின்கடிதம் கிடைத்தது.
வன்னிக்கு யான் வந்த பின்னர்
நீயெழுதிய கடிதம் நெஞ்சை நெருடியது.
என்ன செய்வதென்று தெரியாதிருப்பதாய்
எழுதியுள்ளாய்.
ஒன்றுக்கும் கவலையுறாதே.
வன்னிக்குப் புறப்பட்டு வருக.
இருந்ததெல்லாம் இழந்தாச்சு.
போராடியே ஊர்போகலாமென
ஆனபின்னர் ஏன்தான் அழவேண்டும்.
படைதிரட்டிப் பகை துரத்தலே
உள்ளவழி என்றான பின்னும்
இடிந்தோர் மூலையில் இருந்தென்ன பயன்?
ஒன்றுமேயில்லை.
இப்போதெமக்கு எல்லாமே ஒன்றுதான்.
தென்மராட்சிக்கும் வன்னிக்குமிடையில்
என்ன வேறுபாடு கண்டாய்?
மீசாலையில் உன் அக்கா வீட்டு அடுப்படியிலும்
அக்கராயன் பூமி அச்சா.
மந்துவிலிலுள்ள உன் மாமி வீட்டு
மாட்டுக் கொட்டிலிலும் பார்க்க
வட்டக்கச்சி வளமானது.
தனங்கிளப்புத் தம்பியின் தலைவாசலிலும் பார்க்க
தருமபுரம் வசதியானது
ஏனங்கிருந்து இடிபட எண்ணுகிறாய்?
புறப்பட்டு வருக!
வள்ளம் கரையிற் காத்துக் கிடக்கிறது.
இக்கரையில் வந்து இறங்கியதும்
காற்று வந்து கை கொடுக்கும்!
வன்னிமண் உன்னை வரவேற்கும்.
நாங்கள் வலிகாமம் திரும்புவது
வன்னியிலிருந்தாகட்டும்.
பண்டாரவன்னியனின் பூமியில் பயிற்சியெடுத்து
பகைவனிருக்கும் ஆனையிறவுப் பாசறையைத்
துடைத்தழித்து விட்டு
தரைவழியாக வலிகாமம் திரும்புவோம்.
நேற்றுவரை
தைப்பாவாய் வரும் நாள்களில்
வாசலிற் கோலம் போட்டு வரவேற்போம்.
முற்றத்தில் பொங்கலிட்டு
சுற்றம் கூடிச் சுகிப்போம்.
இந்த வருடம் தைப்பாவை
எந்த எழிலுமற்று வந்து போனது.
யாரும் அவளைக் கவனத்திலெடுக்கவில்லை.
பொங்கிப் படைக்க யாருமின்றி
எம்முற்றம் அழுதிருக்கும்.
அவலத்தையெண்ணி இனியும் அழுது
கொண்டிருந்தால்.
பகைதொலைக்கும் பலம் எம்மை வந்து சேராது,
கலிவீழும்வரை எமக்குக் களிப்பில்லை.
நிமிர்ந்து கொள்ளுவோம்
சாம்பல் மேட்டிலிருந்து தளிர்ப்போம்.
வன்னிக்கு வருக.
உனக்கும் வளமான எதிர்காலமுண்டு.
இன்றோடு இந்தயுகம் முடிந்து விடாது.
இனியும் நாள்கள் நீளும்.
இரவு முடியும் காலை நாளையும் புலரும்.
நம்பிக்கையைத் தொலைப்பவன்
உருப்படமாட்டான்.
புதியவாழ்வை வன்னியில் எழுப்பி
வலிகாமம் செல்லும் வழிகளை எண்ணுவோம்.
புலிவீரம் அடங்கிப் போகாது.
விரைவில் 'நற்செய்தி' வீடுதேடி வரும்.
அதுவரை நொருக்குண்டு போகாதிருப்பதே
நமது போராட்டம்.
வன்னியென்பது ... நீயும்,
உங்கு பலரும் நினைப்பது போல
சகாராப் பாலைவனமல்ல ...
நரமாமிசம் புசிப்போரின் நிலமுமல்ல
பூர்வீகமான எங்கள் தாயின் வயிறு.
ஆனையடக்கிய அரியாத்தையின் வீரமண்.
இயற்கையோடிணைந்த இயல்பின் வடிவம்.
தஞ்சமளிக்கும் தாய்மனம்;
வன்னிக்குக் கிடைத்த வரம்.
உள்வாங்கி இரைமீட்டுக் கொள்ள
இருவிழி போதாத எழில்.
வந்து பார்த்த பின்னரே உண்மையுணர்வாய்.
சுற்றிச் சுற்றி சுப்பரின் கொல்லைக்குள்ளேயே
சுழன்றதால் ...
எமக்கு எல்லைகள் சுருங்கி விட்டது
இனியாவது வேலிகளை விஸ்தரித்துக்
கொள்ளுவோம்
குடியிருக்க நிலமும்,
கொட்டிலடிக்கக் கப்பும் போதும்;
புதிதான வாழ்வொன்றை உருவாக்க முடியும்
உடனே புறப்பட்டு வருக.
வள்ளம் கரையிற் காத்துக் கிடக்கும்.
இக்கரையில் வந்து இறங்கியதும்;
வன்னிமண் உன்னை வரவேற்கும்.

— புதுவை இரத்தினதுரை

## சிமெந்து தொழிற்சாலை மீண்டும் இயங்குமாம்

கொழும்பு, ஜன. 26

காங்கேசன்துறையிலுள்ள சிமெந்துத் தொழிற்சாலை மீண்டும் செயற்பட ஆரம்பிக்கவுள்ளது என ''லக்பிம'' சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள, சிமெந்துக் கூட்டுத் தாபனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று இம்மாத இறுதியில் காங்கேசன்துறை வரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

1990 இல் இத் தொழிற்சாலை செயற்பாட்டை நிறுத்தியபோது மாதாந்தம் 2 லட்சத்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் உற்பத்தி ஆற்றலைக் கொண்டிருந்தது (இ-3[

## அதிபர் கூட்டம்

சாவகச்சேரி, ஜன. 26

தெல்லிப்பளை, சண்டிலிப்பாய் கல்விக் கோட்டங்களின் படசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருப்பதாக கோட்டங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-3)

★ ★ ★

உடுவில் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. (இ-3)

## அரசுத் தரப்பு ஆராயும்

கொழும்பு, ஜன. 26

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக அரசு சமர்ப்பித்துள்ள தீர்வுத் திட்ட சட்ட வரைவு குறித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி கூடி ஆராயவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது (உ-3)

## தங்குமிட வசதி அற்றோருக்கு கெயர் உதவி

கிளிநொச்சி, ஜன. 26

வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் நலன்புரி நிலையங்கள் மற்றும் வீடுகளில் தங்க வசதி இன்றி வீதியோரங்களிலும் கைவிடப்பட்ட கட்டடங்களிலும் தங்கி இருக்கும் மக்களுக்கு கெயர் நிறுவனம் உதவிகளை வழங்கவுள்ளது.

இந்த மக்களுக்கு உணவு தவிர்ந்த உடுபுடைவை, கூரைத் தகடு, பிளாஸ்டிக் வாளிகள், படுக்கை விரிப்புகள், சமையல் பாத்திரங்கள் போன்றவற்றை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிவாரணத்தைப் பெறத் தகுதியுடையவர்கள் எனக் கருதப்படுபவர்கள் தாங்கள் தற்காலிகமாக வதியும் இருப்பிடங்களுக்கு அருகிலுள்ள கிராமசேவகர்களிடம் தங்கள் குடும்ப விவரங்களைப் பதிவு செய்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-12[illegible])

## டிப்ளோமா இறுதி பரீட்சை முடிவுகள்

தேசிய கல்வி நிறுவன பட்டப்பின் கல்வி டிப்புளோமா 92/93 ஆம் ஆண்டு இறுதிப் பரீட்சைகளின் முடிவுகள் நேற்று சாவகச்சேரிக்கு வந்து சேர்ந்தன.

யாழ். இந்துவில் இயங்கிய நிலையத்தில் பயிற்சி பெற்றவர்களின் முடிவுகளை சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்திலும் —

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இயங்கிய நிலையத்தில் பயிற்சி பெற்றவர்களின் முடிவுகளை கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் இயங்கும் வலயம் — 2 [கல்விப் ] பணிப்பாளரின் அலுவலகத்திலும்— பார்வையிடலாம் என அறிக்கப்பட்டுள்ளது.

## கிராஞ்சி - வலைப்பாடு பகுதியூடாக பஸ்சேவை

ஜெயபுரம், ஜன. 26

கிராஞ்சி, வலைப்பாடு, வேரவில் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களின் நன்மை கருதி அப்பகுதிகள் ஊடாக கிளிநொச்சிக்கு மினிபஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பல வருடங்களுக்கு முன்பு கிராஞ்சி, வலைப்பாடு, வேரவில் ஆகிய பகுதிகளுக்கு கிளிநொச்சியில் இருந்து நாள்தோறும் பஸ் ஒன்று போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டது.

இ. போ. ச பஸ்கள் சேவையில் இருந்து நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இப்பகுதி மக்களின் போக்குவரத்துச் சேவையும் ஸ்தம்பிதமடைந்தது.

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இப்பகுதிகளில் பெரும் எண்ணிக்கையாக குடியமர்ந்ததைத் தொடர்ந்து இந்த மாதம் 8 ஆம் திகதியில் இருந்து இச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-175)


**யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை**

மருத்துவ பீட இறுதியாண்டு எழுத்துப் பரீட்சை 1996

1996-01-29 இல் ஆரம்பமாகவிருந்த இறுதியாண்டு மருத்துவமாணி சத்திர சிகிச்சைமாணி எழுத்துப் பரீட்சை 1996-02-05 அன்று ஆரம்பமாகும். மேற்படி பரீட்சைகள் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி. வவுனியா ஆகிய இரு நிலையங்களில் சமகாலத்தில் நடைபெறும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகளையும், நேர அட்டவணைகளையும் 1996 - 02-01 முதல் வவுனியாவில் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி இயக்குநர் அலுவலகத்திலும்; சாவகசசேரி இந்துக்கல்லூரியில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழக உப-அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம். மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு ரூபா 50/– வீதம் பரீட்சைக் கட்டணமாக மேற்குறிக்கப்பட்ட அலுவலகங்களில் செலுத்துதல் வேண்டும்.

பதிவாளர்
(சி/3185)

**யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இலங்கை**

சித்த மருத்துவத்துறை இறுதியாண்டுப் பரீட்சை - 1996

சித்த மருத்துவமாணி சத்திரசிகிச்சைமாணி பரீட்சைகள் ஏற்கனவே, தீர்மானித்தபடி 1996- 01- 29 அன்று சித்தமருத்துவத்துறை, கைதடியில் ஆரம்பமாகும்.

பதிவாளர்
(சி/3186)

மிக மலிவு விலையில்!

**சிறிய பொக்கற் டயறி**

விலை ரூபா 35/-

சகல புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

★ தரமான, நியாயமான அச்சு வேலைகளுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**சிவா அச்சகம்**

கைதடி. (சி/3184)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவர் தமது கல்வியைத் தொடர வலிகாமத்திலிருந்து படையினரை விலக்குக

## தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜனாதிபதிக்கு மகஜர்

வலிகாமத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை வலிகாமப் பகுதி மாணவர்களினது கல்வியை மாத்திரமல்ல, வடமராட்சி, தென்மராட்சி, வன்னிப் பெரும் நிலப்பரப்பு வாழ் 3 லட்சத்து 25 ஆயிரம் தமிழ் மாணவர்களின் கல்வியை முன்பள்ளிக் கல்வி தொடக்கம், பல்கலைக்கழக பட்டப்பின் பட்டப்படிப்பு வரை சகல நிலைகளிலும் ஸ்தம்பிதம் அடையவைத்துள்ளது. இம்மாணவர்களுக்கு அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றாகிய கல்வியை வழங்க வேண்டும் என இலங்கை அரசுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் இராணுவத்தை வலிகாமப் பகுதியில் இருந்து நீக்கி அங்கு பல்லாண்டு காலமாக பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த 5 லட்சம் தமிழ் மக்களை மீண்டும் அவர்களது வாழ்விடங்களில் குடியமர அனுமதிப்பதைத் தவிர வேறு வழி இல்லை.

இப்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அனுப்பிய மகஜரில் தெரிவித்துள்ளார்.

பொதுச் செயலாளரால் அனுப்பப்பட்ட மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

### பாடசாலைகளில் படை முகாம்கள், அகதி முகாம்கள்

இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து 5 லட்சம் தமிழ் மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளமையினால் வட மாகாணத்தின் கல்வி சகல மட்டங்களிலும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள், அரச பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், முன்பள்ளிப் பாடசாலைகள் யாவும் வலிகாமத்தில் மாத்திரமல்ல வடமராட்சி, தென்மராட்சி, வன்னிப் பெரும்நிலப்பரப்பு அகிய பகுதிகளிலும் மூடப்பட்டுக் கிடக்கின்றன.

வலிகாமத்திலுள்ள பல பாடசாலைகள் இராணுவ முகாம்கள் ஆக்கப்பட்டுள்ளன. பல பாடசாலைகள் கற்க மாணவரின்றி வெறிச்சோடிக்கிடக்கின்றன. வடமராட்சி, தென்மராட்சி, வன்னிப் பகுதிகளிலுள்ள பாடசாலைகள் அகதிகள் முகாம்களாக மாறியிருக்கின்றன.

### பல்கலைக்கழகக் கல்வி

இராணுவ நடவடிக்கை காரணமாக விவசாய பீடம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழக பீடங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் பிராந்திய நிலையம் வெளிவாரிப் பட்டப் படிப்புக்கு மாணவர்களுக்கு கல்வி வழங்கும் தனியார் கல்வி நிலையங்கள் யாவும் மூடப்பட்டுள்ளன.

இதனால் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களின் பட்டப்படிப்பு, பட்டப் பின் படிப்பு யாவும் தடைப்பட்டுள்ளன.

10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு, இராணுவ நடவடிக்கையின் விளைவால் உயர்கல்வி முற்றாக மறுக்கப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

### தொழில்நுட்பக் கல்வி

கொக்குவில் பல் தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில் நுட்பக் கல்லூரி, யாழ் சம்பத்தரசியார் தொழில் நுட்பக் கல்லூரி ஆகியன மூடப்பட்டுள்ளன. இம்மூன்று நிறுவனங்களும் ஏறக்குறைய 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மாணவர்களுக்கு தொழில் நுட்பக் கல்வியை வழங்கி வந்தன, இந் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட தொழில் நுட்பக் கல்வியும் மறுக்கப்பட்டுள்ளது.

### தொழில்சார் கல்வியும் பயிற்சியும்

தொழில்சார் கல்வியையும் பயிற்சியையும் வழங்கிய பல நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமானவை சில பின்வருமாறு:-

★ பலாலி ஆசிரிய கலாசாலை.

★ கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

★ தாதியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

★ கல்வித் திணைக்கள முறைசாரக் கல்விப் பிரிவு

★ தேசிய பயிலுநர் சபையினால் நடத்தப்படும் தொழிற் பயிற்சிகள்.

★ தொழிற் திணைக்களத்தினால் நடத்தப்படும் தொழிலாளர் கல்வி நெறிகள்

★ சிறுகைத் தொழிற் திணைக்களத்தால் நடத்தப்படும் தொழிற் பயிற்சி வகுப்புகள்.

★ கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி.

★ திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையம்.

★ யாழ். பல்கலைக்கழக புறநிலைப் பிரிவும், தொழிலாளர் கல்விப் பிரிவும்.

★ தனியார் நிறுவனங்களினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் நடத்தப்படும் முன்பள்ளி ஆசிரிய பயிற்சி நெறிகள்

★ அரச சார்பற்ற நிறுவனங்களினால் நடத்தப்படும் தொழில் முன்நிலைப் பயிற்சி நெறிகள்.

★ திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையம்.

★ இதுபோன்ற பல தனியார் நிறுவனங்களால் நடத்தப்படும் பல்வகைப் பயிற்சி நெறிகள்.

மேற்படி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளமையினால், பல்வேறு வகையான 8 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களின் தொழில் சார் கல்வி வாய்ப்பு மறுக்கப்படுகின்றது.

### பள்ளி முன் கல்வி

பாலர் பாடசாலைகள் யாவும் மூடப்பட்டுள்ளமையினால், 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறார்களின் பள்ளி முன் கல்வி முற்றாக மறுக்கப்பட்டுள்ளது

### பாடசாலைக் கல்வி

அரச ஆயுதப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வலிகாமப் பகுதியில் பொது மக்கள் எவரும் வாழவில்லை. அங்கு வாழ்ந்த 5 லட்சம் மக்களும் இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சி, வன்னிப் பகுதிகளுக்குச் சென்று அப் பகுதியில் அமைந்துள்ள 350 பாடசாலைகளில் வாழுகின்றனர்.

இதனால் இந்த 350 பாடசாலைகளும் இயங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த அகதிகள் பாடசாலைகளை விட்டு அகற்றப்பட்டாலும் கூட, 3 லட்சத்து 10 ஆயிரம் மாணவர்களை இந்த 350 பாடசாலைகளிலும் அனுமதித்து வழமையான முழுமையான கல்வியை வழங்குவது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஏனெனில் வடமராட்சி, தென்மராட்சி, வன்னி பெருநிலப்பரப்பு பகுதிகளில் உள்ள 350 பாடசாலைகளும் 1 லட்சத்து 50 ஆயிரம் மாணவர்களையே கற்பிக்கக் கூடிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச மட்டத்துக்கு பிரச்சினையை கொண்டு சென்றது இலங்கை அரசே

## கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 26

''இனப்பிரச்சினையை உள்நாட்டுப்பிரச்சினை என்று கூறி சர்வதேச மட்டத்துக்கு அப்பிரச்சினையை கொண்டு சென்ற இன்றைய அரசே சர்வதேச உதவியுடன் அதனைத்தீர்க்க வேண்டிய கடப்பாடு உடையது''

இப்படிக் கூறியுள்ளார் கொழும்பு பல்கலைக்கழக சமூக விஞ்ஞானத்துறை முதுநிலை விரிவுரையாளர் நிர்மால் ரஞ்சித்.

பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையின் இனப்பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையாகாது. இதனை இலங்கையில் தீர்க்கமுடியாதுள்ளது. அதுவே உண்மை நிலையாகும்.

உள்நாட்டிலேயே தீர்க்க முடியுமென்றால் அது வரவேற்கப்படலாம். ஆனால் அதனை உள்நாட்டில் தீர்க்க இயலாது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்ததும் அமைச்சர் சநிர்காமர் மூலம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இப்பிரச்சினையை அரசு சர்வதேசப் பிரச்சினையாக்கிவிட்டது. இது மிக மோசமான இனவாதமாகும்.

நளின் டி சில்வா லண்டன் சென்று அங்கு ஆர்ப்பாட்டப் போராட்டம் நடத்தியுள்ளார். இதன் மூலம் அரசே இந்தப் பிரச்சினையை சர்வதேச அரங்குக்கு கொண்டு போயுள்ளது.

இப்படியாக நிலைமைகள் இருக்கும்போது அரசாங்கம் இது உள்நாட்டுப் பிரச்சினை என்றும் பிறர் தலையீடு தேவை இல்லை என்றும் கூறி வருகிறது.

தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கும் முறையில் மேற்கொள்ளப்படும் சர்வதேச தலையீட்டையே இனவாதிகள் எதிர்க்கின்றனர். ஆனால் விடுதலைப் புலிகளை தாக்குவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு வெளியார் ஆயுதம் வழங்குவதை எவரும் எதிர்க்கவில்லை.

இனப் பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினையாகவே சிங்கள பேரினவாதம் நோக்குகிறது.

சர்வதேச பிரச்சினையாக உள்ள எந்தப் பிரச்சினையும் ஒரு நாட்டுக்குள்ளேயே தீர்த்து வைக்க இயலாது என்பதை சகலரும் உணர வேண்டும்— என்றார்.

(இ-3-6)

# சடலம் என்று கூடியோர் ரயரைக் கண்டு ஏமாற்றம்!

## பருத்தித்துறையில் சம்பவம்

மந்திகை ஜன 26

சடலம் கரை ஒதுங்குகிறது என்ற செய்தி கேட்டு கரையில் திரண்ட மக்கள் அது சடலமல்ல, வெறும் ரயர் மட்டுமே எனத் தெரிந்து கொண்டதும் ஏமாற்றம் அடைந்தனர்.

பருத்தித்துறை கடல் பகுதியில் நேற்று முன் தினம் காலை இந்த சம்பவம் இடம் பெற்றது.

கடந்த திங்கட்கிழமை வடபகுதிக் கடற் பிரதேசத்தில் ஹெலிக் கொப்டர் ஒன்று காணாமற்போனது என அரசினால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதில் பயணம் செய்த இராணுவத்தினரின் சடலங்கள் இக்கடற் கரைப் பகுதியில் கரை ஒதுங்கியிருக்கலாம் எனக் கருதியே மக்கள் ஏமாற்றத்துக்குள்ளானார்கள்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

புதன்கிழமை காலை கடலில் அலைமோதியவாறு ஒரு பொருள், மிதந்து வருவதைக் கண்டு மக்கள் கரையில் கூடத் தொடங்கினர். கதை ஊர் மனை எங்கும் பரவியதை அடுத்துமக்கள் ஆயிரக்கணக்கில் அவ்விடத்தில் குழுமினர். நீண்டநேரமாக அப்பொருள் மிதந்து கரைக்கு வருவதாகத் தெரியவில்லை.

நேரம் செல்லச்செல்ல பொறுமை இழந்த மீனவர்கள் சிலர் படகு ஒன்றை எடுத்துக் கொண்டு பொருள் மிதந்த பகுதி நோக்கி விரைந்தனர்.

அருகே சென்றவர்களுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. ரயர் ஒன்றே அங்கு மிதந்து கொண்டிருந்தது.

சடலம் மிதந்து வருவதாக நினைத்து கூடி நின்றவர்கள் ரயர் என்பதைக் [illegible] தும் ஏமாற்றதுடன் [illegible] னர்.

(இ-15)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

26 — 01 — 1996

இரவு

★ 8-00 — ஆரம்பம்

★ 8-02 — கலைமஞ்சரி நிகழ்ச்சியில் புதிய பாடல்கள். சிறுகதை — ''கனவுகளோடு கார்த்திக்''. கவிதை — ''வாருங்கள்''

★ 8. 30 — செய்திகள்.

★ 8. 40 — அறிவிப்புகள் — தொடர்ந்து 9. 00 மணி வரை தாயகப்பாடல்கள்

27 — 01 — 1996

காலை

★ 7-00 — ஆரம்பம்

★ 7. 02 —மாவீரர்வணக்கம்

★ 7-10 — தாயகப்பாடல்கள்

★ 7. 30 — செய்திகள்

★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள்

★ 7. 45 — அறிவிப்புகள் — தொடர்ந்து 8.00 மணி வரை தாயகப்பாடல்கள்

# வேரவில் ஆஸ்பத்திரியில் வைத்திய வசதிகள் இல்லை

## ஒரு டாக்டரே கடமையில்

ஜெயபுரம், ஜன. 26

பூநகரி பிரதேசத்திலுள்ள வேரவில் அரசினர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் நாள்தோறும் சுமார் 200 நோயாளர்கள் சிகிச்சை பெற வருகின்றனர்.

ஆனால் ஒரேயொரு வைத்திய அதிகாரியே (ஆர். எம். பி.) அங்கு கடமையாற்றி வருகிறார்.

இதனால் நோயாளர்கள் மணிக்கணக்கில் வைத்தியசாலையில் காத்துக்கிடக்கின்றனர். மருந்துக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது

யாழ். மாவட்டத்தில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்து வந்து கிராஞ்சி, வேரவில், பொன்னாவெளி, வலைப்பாடு, கிரிக்குடா ஆகிய இடங்களில் தற்போது பெரும் எண்ணிக்கையில் தங்கியுள்ளனர். இப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஒரேயொரு வைத்தியசாலையாக இருக்கும் இவ்வைத்தியசாலையில் மருந்து இல்லாமலும் மக்கள் அவதிப்படுகின்றனர்.

(இ-175)

# பூநகரியில் உறவினர், நண்பர் வீடுகளில் உள்ளோருக்கும் உதவி

பூநகரி பிரதேசசெயலர் பிரிவில் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கு படுக்கை விரிப்பு, பாய், பிளாஸ்ரிக் பொருள்கள், லாம்பு, சமையல் பாத்திரங்கள் ஆகியவற்றை விநியோகிப்பதற்கு பிரதேச செயலர் திரு. இ. இரவீந்திரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

முதல் கட்டமாக பூநகரி பிரதேசத்திலுள்ள கிராஞ்சி, ஜெயபுரம் வடக்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கு இந்தப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

(இ-175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய றொபின் EY 20 நீர் இறைக்கும் இயந்திரம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பு. ஞானப்பிரகாசம், வாகையடிச் சந்தி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
(40251)

### காணி விற்பனைக்கு

தும்பளையில் உள்ள லூர்து மாதா கோவிலிற்கு அருகாமையில் உள்ள காணி 5½ பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: சச்சிதானந்தம், மூத்த தம்பியார் வளவு, வதிரி, கரவெட்டி வடக்கு, கரவெட்டி. (40098)

### தேவை

வெற்றுப் போத்தல்கள் தேவை. வெற்று ஹார்லிக்ஸ் / வீவா (பெரிது), ஜாம் போத்தல்களை நெல்லியடியில் சுபாஸ் பேக் ஹவுஸ், சாயி கிருஷ்ணா (வதிரிச் சந்தி)யில் ஒப்படைத்துப் பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள். ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட்.
(சி-3169)

பெண் அறிவிப்பாளர்கள், குரல் வளம் உள்ளோர் மட்டும் விண்ணப்பங்களை நேரில் கையளிக்கவும். மணிக்குரல் விளம்பர சேவை, நவீன சந்தை மேல் மாடி. சாவகச்சேரி. (சி-2951)

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அனுபவமுள்ள ஆங்கில சுருக்கெழுத்தாளர் உடனடியாகத் தேவை. தாமாகவே கடிதங்கள் வரைந்து செயற்படக்கூடியவராக இருக்க வேண்டும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். இல.522, மே/பா உதயன், சரசாலை தெற்கு. (40242)

### உடன் தேவை

நல்ல நிலையில் உள்ள தமிழ் தட்டச்சு இயந்திரம், கசற் ரேடியோ, ஒகன், தபேலா என்பன உடன் தேவை. முகவரி: ஆ. பரமேஸ்வரன், மே/பா செ. தங்கராசா, ''வேதவனம்'', ஆனையிறவு சமர் நினைவுப் பூங்கா அருகாமை ஒழுங்கை, கொடிகாமம். (46013)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு ஏ. ஆர். வி

தென்மராட்சி ஜன. 26

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு விசர் நாய்க்கடி நோய்த் தடுப்பு ஊசி மருந்து (ஏ. ஆர்.வி) மற்றும் ஏற்புத் தடை ஊசி மருந்து ஆகியவை வந்துள்ளன.

கடந்த வாரம் இந்த ஊசி மருந்து இந்த வைத்தியசாலையில் முடிவடைந்ததால் நோயாளர் பலர் மந்திகை வைத்தியசாலைக்கு செல்ல வேண்டி இருந்தது.
(இ-117)

## தொடர்பு கொள்ளவும்

பஸ்தியான் அச்சகத்தில் கடமையாற்றிய
தங்கேஸ்வரனை
மயில்வாகனம்
மாஸ்ரர்
அவசரமாகத் தேடுகிறார். சாவகச்சேரி யோகா டிஸ்பென்சரியில் தொடர்பு கொள்ளவும்.
(40253)

## ஆங்கில தட்டச்சு யந்திரங்கள் தேவை

விற்க விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
நிர்வாக உத்தியோகஸ்தர்
உதயன் பணிமனை
சரசாலை தெற்கு,
[கனகம்புளியடிச்சந்தி அருகாமையில்]
சாவகச்சேரி.

## ARCHERY FINANCIAL SERVICE

ஆச்சாரி
அடகு சேமிப்புத்திட்டம்

இல. 426, காங்கேசன்துறைவீதியில் இயங்கிவந்த அடகு கடையில் அடகு வைத்தவர்கள் தயவு செய்து அடகை மீட்கும்படி வேண்டப்படுகிறீர்கள்

ந. விக்னேஸ்வரன்
C/o R. நடராசா
மணல் வீதி, மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(40252)


இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் பேரவை

## விசேட பொதுக்கூட்டம்

இலங்கைச் சைவக் குருமார் அர்ச்சகர் பேரவையின் விசேட பொதுக் கூட்டம் (28- 01- 96) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் தும்பளை அருள்மிகு நெல்லண்டைப்பத்திரகாளி கோவிலடியில் நடைபெறும். இடம்பெயர்ந்த சைவக்குருமார், அர்ச்சகர்மார்களின் நிவாரணம் பற்றிய விவரம் சேகரிக்க வேண்டியுள்ளதால் சகல சைவக்குருமார்களையும் சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

க. சோமசுந்தரக் குருக்கள்
செயலாளர்
(40248)

## 31ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் குமாரசாமி முத்துக்குமாரு

(7ஆம் வட்டாரம், புங்குடுதீவு)

தோற்றம்: 17 - 03 - 1920
மறைவு: 27 - 12 - 1995

எங்களின் குலவிளக்காய் இருந்து
எம்மைக் காத்தவரே
சொந்தங்கள் சுற்றங்கள் சூழ
இனிது பார்த்தவரே
பந்தங்கள் விட்டு இன்று
பரமனடி சேர்ந்து விட்டீர்
உங்களை நாம் காண்பதெப்போ
எம் துயரும் தீர்வதெப்போ

உங்கள் ஆத்மா சாந்திடைய பிராத்திக்கின்றோம்

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மாயவனூர்,
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.
(39998)

## குழாய்க் கிணறு அமைக்க சர்வதேசசெஞ். குழு உதவும்

சாவகச்சேரி, ஜன. 26

இடம்பெயர்ந்த மக்கள் குடியமர்வதற்கு என அமைக்கப்படும் குடியேற்றங்களில் குழாய் கிணறுகளை அமைக்கும் நடவடிக்கைகளுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு உதவவிருக்கிறது.

குடிதண்ணீர்ப் பிரச்சினை ஏற்படாமல் தடுப்பதற்காகவும்—

குடிதண்ணீரால் நோய்கள் பரவாமல் தடுக்கும் நோக்கத்துக்காகவும்—

குடியேற்றப் பகுதிகளில் 100 குழாய் கிணறுகளை அமைக்க இந்த அமைப்பு முன்வந்துள்ளது.

இந்த குழாய் கிணறுகளை அமைக்க தேவையான உபகரணங்களை எடுத்துவர இந்த அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவந்தது. (உ-3)

## நல்லூர்இறங்கு துறையிலும அவசர சிகிச்சை நிலையம்

### இன்று திறந்து வைப்பு

சாவகச்சேரி, ஜன 25

அவசரகால சிகிச்சை நிலையம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பூநகரி-நல்லூர் இறங்குதுறையிலும் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

கிளாலிப் பயணிகளின் நன்மைகருதி அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையம் இந்த நிலையங்களை அமைத்து வருகிறது.

கடந்த வாரம் கிளாலி இறங்குதுறையில் அமைக்கப்பட்ட சிகிச்சை நிலையம் போன்றே நல்லூர் இறங்குதுறையிலும் சிகிச்சை நிலையம் அமைக்கப்படவிருக்கிறது. (இ-3)

### கொடிகாமம் வட்டப்பிரதேச

## பொது அமைப்பினரை சமுகமளிக்க கோரிக்கை

சாவகச்சேரி, ஜன. 26

கொடிகாமம் வட்டப்பிரதேசத்திற்குட்பட்ட பொது அமைப்புக்களுடனான சந்திப்பொன்று நாளை 27ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் இடம்பெறவிருப்பதால் அதில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள் அனைவரையும் சமூகம் கொடும்படி அரசியல்துறையினரால் கேட்கப்பட்டுள்ளது.

அவர்கள் விவரம் வருமாறு:-

★ அதிபர், ஆசிரியர்கள்,
★ வணிகர் மன்றங்கள்,
★ பலநோக்கு கூட்டுறவுச் சங்க நெறியாளர்கள், பணியாளர்கள், (இடம்பெயர்ந்து வந்துள்ள சங்கங்கள் உட்பட)
★ கிராம அபிவிருத்திச் சங்கங்கள்,
★ சன சமூக நிலையங்கள்,
★ கோயில் நிர்வாகத்தினர்,
★ மாதர் சங்கங்கள்,
★ விளையாட்டுக் கழகங்கள்,
★ ஊர்காப்புக் கழகங்கள்.
(இ)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு ஆஸி. வைத்தியர்

கிளிநொச்சி, ஜன. 26

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டாக்டர் இமாக் குளேற்றே என்பவர் மகப்பேற்று நிபுணராக நியமனம் பெற்றுள்ளார்.

இவர் எம். எஸ். எவ். மருத்துவக் குழுவுடன் இணைந்து செயலாற்றி வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.
(இ-123)

## தமிழ் மாணவர்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வசதிகளை உடையனவாக இருந்தன. 1 லட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்ற பௌதிக வளத்தைக் கொண்டு 3 லட்சத்து 50 ஆயிரம் மாணவர்களை கற்க வைப்பதென்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்பது தெளிவு.

இலங்கை அரசு வடபகுதி வாழ் 3 லட்சத்து 25 ஆயிரம் தமிழ் மாணவர்களின் கல்வியில் இதயபூர்வமான அக்கறை கொண்டிருப்பின் வலிகாமத்தில் அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து நிலை கொண்டிருக்கும் 40 ஆயிரம் ஆயுதப்படையினரையும் மீளப்பெற்று, 5 லட்சம் மக்களையும் தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த தங்கள் வாழ்விடங்களில் வாழ வைப்பதே இம்மாணவர்களின் வழமையான, முழுமையான கல்வியை வழங்க வழி சமைப்பதாக அமையும்.

இலங்கையிலுள்ள எந்த அரசியல் அமைப்புகளுடனும் கட்சி சாராத இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை அரசை, அரச படைகளை முற்றாக விலக்கி 3 லட்சத்து 25 ஆயிரம் வடபகுதி வாழ் தமிழ் மாணவர்களினுடைய மனித அடிப்படை உரிமைகளில் ஒன்றாகிய கல்வி கற்கும் உரிமையை வழங்க ஆவன செய்யுமாறு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றது.

இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

மீண்டும்

## அரிக்கன் லாம்பு - மேசை லாம்பு சிம்மினிகள்

த பெனின்சுலா குரூப் கண்ணாடி பொருள்கள் விநியோகத்தர் குமார் மீண்டும் குடாநாட்டில் விற்பனையை ஆரம்பித்துள்ளார்.
கடைகளுக்கு நேரில் வந்து விநியோகம் செய்யப்படும்.

**A. குமார்**
9 ஆம் வட்டாரம்.
புதுக்குடியிருப்பு.
(40250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நனைத்துச் சுமக்கலாமா?

சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு முன்னர், ஆயுதங்களைக் கீழே போடுமாறு ஆயுதக் குழுக்களைக் கேட்பது யதார்த்த பூர்வமானது அல்ல.

ஆயுதக் களைவு குறித்து ஆராய்ந்த சர்வதேச விசாரணைக்குழு இவ்வாறு பரிந்துரை செய்துள்ளது. இந்த விசாரணைக் குழுவுக்கு முன்னாள் அமெரிக்க செனட்டர் ஜோர்ஜ் மிச்சேல் தலைமை வகித்துள்ளார்.

சர்வதேச விசாரணைக் குழுவின் மேற்கண்ட பரிந்துரையை ஸ்ரீலங்கா அரசாங்கம் கவனதுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அரசியல் ஆய்வாளர்கள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆனால், அரசியல் தீர்வில் தனக்கு நாட்டம் உள்ளதாகக் காட்டிக் கொள்ளும் சந்திரிகா அரசாங்கம் —

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு, அவர்கள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்று நிபந்தனை விதித்திருக்கிறது.

தமிழர் பிரச்சினைக்கு நீதியான, நியாயமான, தமிழர்களைத் திருப்திப்படுத்தக் கூடிய தீர்வு ஒன்றைக் காண்பதற்கு முன்னர், விடுதலைப் புலிகளை ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு கேட்பது யதார்த்த பூர்வமானது மட்டுமல்ல; அர்த்தமற்றதும் ஆகும்.

விடுதலைப் புலிகளிடம் ஆயுதம் இருப்பதால் தான் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும், தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கியாக வேண்டும் என்ற நெருக்குதல், நிர்ப்பந்தம், மன அழுத்தம் சிங்கள அரசுகளுக்கு உருவாகி உள்ளது.

ஆயுதப் போராட்டத்தின் மூலம்தான், தமிழர்களின் உரிமைகள் பறித்தெடுக்கப்பட்ட விவகாரம் உலகத்துக்குத் தெரிய வந்தது. பிரச்சினையும் முக்கியத்துவம் பெற்றது; எரியும் விவகாரமாக மாறியது.

ஆயுதம் இன்றி அகிம்சை வழியில் தமிழர்கள் போராடிய போது, அவர்கள் எவ்வாறு சிங்கள அரசுகளாலும், சிங்களத் தலைவர்களாலும் மிதித்து, நசுக்கி வீசப்பட்டார்கள்; செல்லாக் காசாகத் தூக்கி வீசப்பட்டார்கள் என்பதனை மறந்து போக, தமிழர்களின் ஞாபக சக்தி அவ்வளவுக்கு மந்தமானது அல்ல.

தான் முன்வைத்துள்ள அரசியல் தீர்வுச்சட்ட ஆவணத்துக்கு எல்லா அரசியல் கட்சிகளினதும் ஆதரவை அரசாங்கம் கோரியுள்ளது.

ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவை மட்டும் கோரவில்லை. அது குறித்து உத்தியோகபூர்வமாக அந்த இயக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் இல்லை.

அரசு — விடுதலைப் புலிகள் பேச்சு மூன்றாம் தரப்பு ஒன்றின் மத்தியஸ்தத்துடனேயே நடைபெற வேண்டிய கட்டம் ஒன்று — கட்டாயம் ஒன்று — உருவாகியிருக்கும் வேளையில் —

அரசாங்கம் விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாக ஓரங்கட்டிவிட்டு, இராணுவ ரீதியாக அவர்களை ஒடுக்கி விடலாம் என நினைப்பது இனப்பிரச்சினையை இருபத்தோராம் நூற்றாண்டுக்கும் நனைத்துச் சுமந்து செல்வதாகவே முடியும்!

# யாழ். ஆஸ்பத்திரி தாதியர்கள் 25 பேருக்கு இடமாற்ற உத்தரவு

## கடிதம் தனிச் சிங்களத்தில்

மந்திகை, ஜன, 26

மந்திகையில் இயங்கும் யாழ். போதனா வைத்திய சாலை தாதிய உத்தியோகத்தர்கள் 25 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வெளியே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் இந்த இடமாற்றம் அமுலுக்கு வரும் என இது தொடர்பாக அனுப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றக் கடிதம் தனிச் சிங்களத்திலேயே அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இதில் உள்ளவற்றைப் புரிந்துகொள்வதற்காக சிங்களம் தெரிந்தவர்களைத் தேடி அலைய வேண்டியதாயிற்றார்.

இதற்கிடையில், யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்கனவே தாதியருக்கு பற்றாக்குறை நிலவுவதால், இந்த இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துவதில் ஆஸ்பத்திரி நிர்வாகம் சில சிக்கல்களை எதிர்நோக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கிருந்து இடமாற்றம் பெறும் தாதியர்களுக்குப் பதிலாக உடனடியாக வேறு தாதியர் பணிக்கு அமர்த்தப்பட வேண்டும் என்றும் —

அவ்வாறு நியமனம் பெறாத பட்சத்தில் இவர்களின் இடமாற்ற உத்தரவை நடைமுறைப்படுத்துவது சாத்தியமானது அல்ல என்றும் — ஆஸ்பத்திரி நிர்வாகம் கருதுவதாகத் தெரிகிறது.

இலங்கை முழுவதிலும் 57 தாதியர் பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் பெறுகின்றனர். அவர்களிலேயே இந்த 25 பேரும் அடங்குகின்றனர். (இ-15)

## சம்பளக் கட்டுநிதி இன்னும் வரவில்லை

வடமராட்சி, ஜன. 26

யாழ். போதனா வைத்திய சாலை ஊழியர்களுக்கான சம்பளக் கட்டுநிதி இன்னமும் வந்துசேரவில்லை.

இதனால் இம்மாதத்துக்கான சம்பளம், ஊழியர்களுக்கு இன்னமும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-173)

## தாதியர் பயிற்சிப்பாடசாலையை மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை

யாழ். போதனா வைத்திய சாலையில் இயங்கிவந்த தாதியர் பயிற்சிப் பாடசாலையை மந்திகையில் இயங்கி வரும் யாழ். போதனா வைத்திய சாலையில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ் போதனா வைத்திய சாலை இடம்பெயர்ந்ததை அடுத்து இப் பயிற்சிப் பாடசாலை கடந்த மூன்று மாதங்களாக இயங்காது இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

தாதியர் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த தாதிய மாணவர்களுக்கு உடனடியாக பயிற்சி நெறிகளை ஆரம்பிக்குமாறும்—

தவறின் அந்த தாதிய மாணவர்களை பயிற்சிக்காக பதுளைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும்— சுகாதார அமைச்சு யாழ் போதனா வைத்தியசாலைக்கு பணிப்புரை விடுத்திருந்தது.

இதனை அடுத்தே தாதியர் பயிற்சிப் பாடசாலையை மந்திகையில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை போதனா வைத்தியசாலை நிர்வாகம் எடுத்துள்ளது.

யாழ் போதனா வைத்திய சாலையின் ஒரு பகுதி இயங்கி வரும் புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலேயே இப் பயிற்சிப் பாடசாலை நடைபெற உள்ளது. (இ-15)

## நாய்களின் தொல்லை ஒழிந்தது

மந்திகை, ஜன. 26

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் நிலவிவந்த கட்டாக்காலி நாய்களின் தொல்லை நீக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப்பகுதியினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டாக்காலியாக நோயாளர்களுக்குத் தொல்லை கொடுத்துவந்த நாய்கள் சுகாதாரப்பகுதியினரின் முயற்சியால் அழிக்கப்பட்டுள்ளன. இவையாவும் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### சிங்களம் - தமிழ் கற்பிக்க

## பாடசாலை வகுப்பு நேரம் அரைமணி நேரம் நீடிப்பு

கொழும்பு, ஜன. 26

அரசாங்க பாடசாலைகளின் போதனா நேரம் அரைமணித்தியாலம் நீடிக்கப்பட விருப்பதாக கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

தமிழ் மாணவர்கள் சிங்கள மொழியை பயிலவும், சிங்கள மாணவர் தமிழ் மொழியை பயிலவும் வசதியாகவே போதனா நேரம் நீடிக்கப்பட இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த திட்டத்துக்கு ஓர் ஆசிரியர் தொழிற் சங்கம் தவிர்ந்த ஏனைய ஆசிரியர் தொழிற் சங்கங்கள் ஆதரவு தர முன்வந்துள்ளன என்றும் அவர் கூறினார். (இ-3)

### பயிலுநர் ஆசிரியர்

## நேர்முகப் பரீட்சைக்கு கிளிநொச்சியிலிருந்து 7பேர்

கிளிநொச்சி, ஜன. 26

தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் பயிலுநர் ஆசிரியர்களை தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சைக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து ஏழு பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 2ஆம் திகதி வவுனியாவில் இந்த நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு;-

- ★ ரி. கமலவேணி — இரத்தினபுரம்.
- ★ எஸ். கோகுலபாலன் — கோணாவில்.
- ★ எஸ். பத்மநிதி—செல்விபுரம்.
- ★ எஸ். மாலினி — உருத்திரபுரம்.
- ★ பி. தனபாலசிங்கம்— அத்தாய்.
- ★ பி. சிவானந்தி — பல்லவராயன்கட்டு.
- ★ பி. நிகுந்தலா — நெருக்கைத்தீவு. (இ-3)

## ஆயுதங்களை போடும்படி கோருவது நியாயமாகாது

### விக்ரர் ஐவன் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 26

மோதல்களில் ஈடுபட்டுள்ள எந்தக்குழுவிடமும் எடுத்த எடுப்பிலே ஆயுதங்களை போடும்படி கோருதல் நியாயமாகாது.

'ராவய' ஆசிரியர் விக்ரர் ஐவன் சிங்கள பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் இப்படிக் கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

சமாதான முயற்சிகளுக்கு யதார்த்தமாக பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இது அத்தியாவசியமாகும்.

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு —

தமக்கென இராணுவத்தை ஏற்படுத்தி மோதல்களில் ஈடுபட்டுள்ள எந்தக்குழுவினரையும் எடுத்த எடுப்பல்ல ஆயுதங்களைப் போடும்படி கோருதல் நியாயமாகாது. அவர்களுக்கு பாதுகாப்புப் பிரச்சினை உண்டு.

ஆயுதங்களினாலேயே தங்களின் பிரச்சினையைத் திர்க்க முடியும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் பிரச்சினை தீர்க்கப்படாமல் எப்படி ஆயுதங்களை கைவிடுவர்.?

இப்படி அவர் கேட்டார். (இ-3)

## விண்ணப்பம் கிடைத்ததை உறுதி செய்யும் கடிதங்கள்

### தபாலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன

சாவகச்சேரி, ஜன. 26

பல்கலைக்கழக 95/96 ஆண்டுக்கான அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு விண்ணப்பம் ஏற்றுக் கொண்டமையை உறுதி செய்யும் கடிதங்கள் தபாலகங்களுக்கு வந்துள்ளன.

யாழ். பிரதம தபாலகம் உட்பட ஏனைய தபாலகங்களில் இந்த வகையான கடிதங்கள் தேங்கிக்கிடப்பதாகவும்—

அவற்றை பெறுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (இ-2)

## ஒருவருடம் கழிந்து கிடைத்த கடிதங்கள்

மந்திகை, ஜன. 26

ஜேர்மன் நாட்டில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் ஓராண்டு கழித்து வந்து சேர்ந்தது.

ஜேர்மன் அகதி முகாமில் இருக்கும் இரண்டு இளைஞர்கள் 15.1.95இலும், 20.1 95 இலும் யாழ்ப்பாணத்தில் இருந்த தமது உறவினர்களுக்கு கடிதங்கள் அனுப்பியிருந்தனர்.

இக்கடிதங்களே ஒருவருடம் கழித்து இம்மாதம் 23 ஆம் திகதி பருத்தித்துறையில் இருக்கும் உரியவர்களின் கைக்கு கிடைத்தது. (இ-15)

## அரசு மீது நான்கு தமிழ்க் கட்சிகள் ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்கள்

### அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 26

''அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான சட்ட ஆவணங்கள் குறித்து நான்கு தமிழ்க் கட்சிகள் ஆதாரமற்ற குற்றச் சாட்டுக்களை அரசு மீது சுமத்தியுள்ளன.''

நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

பிராந்திய சபைகளை கலைப்பதற்கு ஜனாதிபதி முறையற்ற அதிகாரங்களை கையாள்வார் என்பது இந்த தமிழ்க்கட்சிகளின் குற்றச் சாட்டாகும்.

எனினும் உத்தேச சபைகளை கலைப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரத்தை மட்டுப்படுத்தும் ஏற்பாடுகள் சட்ட வரைவில் அடங்கியுள்ளன.

நாட்டின் இறைமைக்கும், பிராந்திய ஒருமைப்பாட்டுக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே பிராந்திய சபைகளைக் கலைப்பதற்கு சட்ட ஆவணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார். (இ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ் மக்கள் புலம்பெயர்வு:

# திரிவுபடுத்தப்பட்ட தகவல்களுக்கு பல்கலைக்கழக சமூகம் கண்டனம்

சாவகச்சேரி, ஜன. 26

இம்மாதம் ஒன்பதாம் திகதி பி. பி. ஸி. உலக சேவை தமிழ்ச் சேவை ஒலிபரப்பில் யாழ். மக்களின் புலப்பெயர்வு பற்றி வெளியான செய்திக் கண்ணோட்டக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கும், தகவல்களுக்கும் மறுப்புத் தெரிவித்தும் உண்மையை வெளிப்படுத்தியும்– –

யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

உரிமைகளுக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் என்னும் பெயரில் ஒரு குழு வெளியிட்ட அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு ஒலிபரப்பப்பட்ட அந்தக் கட்டுரை திரிபுபடுத்தப்பட்ட, பொய்யான கருத்துக்களை விதைத்திருப்பதாக—

யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர் தமது அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்த அறிக்கையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் இருபது பேர் கையொப்பம் இட்டுள்ளனர்.

அந்த மிக நீண்ட அறிக்கையின் சில முக்கிய பகுதிகள் வருமாறு:-

யாழ்ப்பாணம் மீது படையெடுப்பு நிகழ்ந்தால் 20,000 மக்கள் கொல்லப்படுவர் என்பதும், அதற்கும் மேற்பட்ட எண்ணிக்கையானோர் அங்கவீனராவர் என்பதும் யாழ்ப்பாணப் படையெடுப்பைத் திட்டமிட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தின் கணிப்பு என்பது எல்லோருக்கும் தெரியும்.

இத்தகைய பெரும் உயிர் இழப்பை தவிர்க்கத் தம்மால் இயன்றவரை புலிகள் போராடி இருக்கிறார்கள்.

மக்கள் வெளியேற்றத்தால் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டுள்ளதும் —

தொடர்ந்தும் புலிகளின் எதிர்த் தாக்குதல்களினால் தான் இராணுவம் நகரை வந்தடைய அதிக நாள் எடுத்தது என்பதும் — மறைக்க முடியாத உண்மைகள்.

### மக்கள் எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடி ஏற்றப்பட்டமை எந்த ஒரு தமிழ் மகனாலும் ஜீரணிக்கப்பட முடியாததாகும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இராணுவத்தை வெளியேற்றி விட்டு வீட்டுக்குப் போ என்று எப்போது புலிகள் சொல்வார்கள் என்ற எதிர்பார்ப்பிலேயே இங்குள்ள மக்கள் வாழ்கின்றனர்.

அரசு யாழ்ப்பாண நகரைக் கைப்பற்றும் தாக்குதலை நவம்பர் மாத முற்பகுதியில் ஆரம்பித்தது என்பதும் —

ஆரம்பித்த மறுகணம் மக்கள் வெளியேற்றப்பட்டனர் என்பதும் அப்பட்டமான பொய்களாகும்.

மக்கள் தமது இருப்பிடங்களை விட்டும் செல்ல விரும்பவில்லை என்பது உண்மையே. ஆனால் இராணுவம் கட்டுப்பாட்டைப் பெற்ற பின் திரும்புவோம் என எண்ணியதாகக் கூறுவது தவறு. இன்றுவரை மக்கள் யாழ்ப்பாணம் செல்ல முண்டியடித்துக் கொண்டு செல்லாததே அதற்குரிய சான்றாகும்.

சிங்கள வெறிகொண்ட ஸ்ரீலங்கா இராணுவத்தின் அடாவடித்தனங்களில் இருந்து தமிழ் மககளைப் பாதுகாக்க முயலும் ஓர் அமைப்பாகவே புலிகள் எமக்குத் தெரிகின்றனர். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# தி. மு. க. கூட்டணியிலிருந்து பாட்டாளி கட்சி விலகியது

லண்டன், ஜன. 26

தமிழ் நாட்டில் நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தலில் போட்டியிட தி. மு. க அமைத்துள்ள ஏழு கட்சிக் கூட்டணியிலிருந்து பாட்டாளி மக்கள் கட்சி விலகியுள்ளது.

தி. மு. க. வும் அதன்தலைவரும் கூட்டணியிலுள்ள கட்சிகளை ஆக்கிரமிக்க முயன்றதாலேயேதாம் கூட்டணியிலிருந்து விலகியுள்ளதாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.

வாழப்பாடி இராமமூர்த்தியின் திவாரி காங்கிரஸ் கட்சியும் இந்த கூட்டணியில் இருந்து விலக்கப்பட்டதால் தற்போது ஐந்து கட்சிகளே இந்த கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன.

இந்தக் கூட்டணியிலிநந்து மேற்படி இருகட்சிகளும் விலக இருப்பதால் தி மு. க. வுடன் காங்கிரஸ் கூட்டணி அமைத்துக் கொள்ள இருந்த தடைகள் நீக்கியுள்ளன என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

பாட்டாளி மக்கள் கட்சியைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியும் கூட்டணியிலிருந்து விலகக்கூடும் என பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

(இ–7)

## திருத்தம்

க. பொ. த. உயர்தர பரீட்சையில் (1995) அதிசிறந்த பெறுபேற்றை பெற்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியைப் பெருமைப்படுத்திய எட்டு மாணவர்களில் —

ஜெயசுதா — 2A, 2B
கபிலஸ் — A, 3B

ஆகிய இரு மாணவர்கள் மட்டுமே முகாமைத்துவத் துறைக்கு தெரிவாகத் தகுதி பெற்றுள்ளனர்.

நேற்றைய உதயன் ஆறாம் பக்கத்தில் வெளியான

''வாழ்த்துக்கள்''

விளம்பரத்தில் அடையாளம் இடப்பட்டதில் தவறு நேர்ந்து விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## ஐ.தே.கவுடன் பீரிஸ் பேசுவார்

அதிகாரப் பரவலாக்கள் சட்டவரைவு குறித்து ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐ. தே. க தலைவர்களுடன் அமைச்சர் பீரிஸ் பேச்சு நடத்த விருக்கிறார்.

(இ-3)

### 39 படையினர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கக்கூடிய படையினர் அல்லது உயிரிழந்த படையினரின் சடலங்கள் ஆகியவை பற்றிய தகவல்களைப் பெறுவதிலேயே செஞ்சிலுவை அதிகாரிகள் அதிக அக்கறை காட்டி வருகின்றனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-6)

### வடக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரி, அச்சுவேலி சென். திரேசா மகாவித்தியாலயம் ஆகியவற்றில் பாடசாலைகளை இயக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவே இவர் படையினரால் அங்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அங்கு தங்கியுள்ள ஆசிரியர்களைக் கொண்டு பாடசாலைகளை இயக்குவது குறித்து அவர் அங்கு ஆராய்வார் எனத் தெரிவிக்கப்பட்டது

(இ-3)

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் கனகரத்தினம்

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், மடத்தடி மாவிட்டபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கனகரத்தினம் 24-01-1996 புதன் கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், குகதாசனின் (சவூதி) அன்புத் தந்தையும், நளினியின் அன்பு மாமனாரும், பிரசாந்த், விபுசாந்த் ஆகியோரின் அன்புப் பேரனும், குணவதி, காலஞ்சென்றவர்களான தம்பு, சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், சின்னையா, காலஞ்சென்றவர்களான கந்தையா, சிவகுரு, தருமலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25-01-1996 வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் மிருசுவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
தம்பு பத்மநாதன்

கரம்பகம்,
மிருசுவில். (40255)

### கந்தவனம் விநாசித்தம்பி

(அளவெட்டி)

அலுக்கை, அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய கந்தவனம் விநாசித்தம்பி 24-01-96 புதன் கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், சத்தியலட்சுமி (அஸ்வினி யுவலர்ஸ், சுன்னாகம்), ராஜரட்ணம் (வீனஸ் ரேட், கொழும்பு), சண்முகநாதன் (ஆசிரியர் விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்), சரஸ்வதி, பேரின்பநாயகம் (சாரதா புடவை மாளிகை - யாழ்ப்பாணம்), மகாலிங்கம் (கனடா), வசந்தலோஜினி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணபதிப்பிள்ளை (அளவெட்டி), கிருபாகரன் (கிருபா போட்டோ, மல்லாகம்), நிர்மலாதேவி (ஆயுர்வேத வைத்தியர், வட்டுக்கோட்டை), தவரஞ்சினி, நிர்மலா (கனடா), விஜி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் 25-01-96 வியாழக்கிழமை மாலை கொழும்பில் நடைபெற்றன

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வி. சண்முகநாதன், [மகன்]

தற்போதைய முகவரி:
C/o R. பாலசுப்பிரமணியம்.
விமலாகிரி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி. (40254)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை சரஸ்வதி

புலோலி தெற்கு, புற்றளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சரஸ்வதி நேற்று (25-01-1996) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் கணபதிப்பிள்ளை (Retd. Supdt. of Surveys) இன் அன்பு மனைவியும், அசோகன், இரஞ்சித் ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. அசோகன்
(மகன்)

மாவில் வயல் வீதி,
புற்றளை,
புலோலி. (40256)

### செல்லப்பா முத்தையா

(கோப்பாய் வடக்கு)

கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது மட்டுவில் தெற்கு வாதையடியில் வசித்தவருமான செல்லப்பா முத்தையா 25-1-96 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அன்னமுத்துவின் அன்புக் கணவரும், சிவலோகநாதன், சிவனேஸ்வரி, சறோஜினிதேவி, விமலாதேவி, சுசிலாதேவி, சிவகுணநாயகி, சிவகுணநாதன் (இத்தாலி), பரமேஸ்வரன் (பிரான்ஸ்), சிவயோகநாதன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகரத்தினம், நவரத்தினம், தம்பிஐயா, சற்குணம், மாணிக்க தியாகராசா, இராசமலர், சின்னக்கிளி, போலா, அருணா ஆகியோரின் மாமனாரும், கபிலன், கஜெந்தன், கஜெந்தினி, உமாசுதன் (இத்தாலி), உமாசக்தி, சுபா (இத்தாலி), றஞ்சன் (நோர்வே), ரகு (பிரான்ஸ்), திரு (பிரான்ஸ்), கரன் (இந்தாலி), நிவா (பிரான்ஸ்), முகுந்தன் (பிரான்ஸ்), பகீர், கிருபா, கிருஷ்ணவேணி, சைலஜா, நிசந்தன், தரிசிகா, பிரியலதா, பிருந்தா, பிரசாத், டிசானி, டிசாந்தன், ஜானுகா, அஜந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
மு. சிவலோகநாதன்
(மகன்)

தற்போதைய முகவரி:
மா. சுப்பிரமணியம்
(இளைப்பாறிய மக்கள் வங்கி உத்தியோத்தர்.)
மருதங்குளம்,
மட்டுவில் தெற்கு. (40257)

சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளின் சங்கமமாக விளங்குகின்ற

**யாழ். ராசி சில்க்ஸ் (ராசி பட்டுச் சோலை)**

தற்பொழுது இரு வேறு இடங்களில்

ராசி சில்க்ஸ்,
(புகையிரத நிலைய முன்பாக)
கொடிகாமம்.

(பட்டுப் புடைவைகளின் சங்கமம்)

ராசி சில்க்ஸ்,
(மகாத்மா திரையரங்கு முன்பாக)
நெல்லியடி. (சி/2943)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிக பணிமனையில் 26-01-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org